අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## சைவநெறி

## புள்ளியிடும் திட்டம்



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 12 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

### புள்ளி வழங்கும் திட்டம்

### சைவநெறி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **4** | 11. | **3** | 21. | **1** | 31. | **1** |
| 02. | **2** | 12. | **1** | 22. | **3** | 32. | **3** |
| 03. | **3** | 13. | **2** | 23. | **2** | 33. | **2** |
| 04. | **1** | 14. | **4** | 24. | **4** | 34. | **4** |
| 05. | **2** | 15. | **3** | 25. | **1** | 35. | **1** |
| 06. | **4** | 16. | **1** | 26. | **2** | 36. | **3** |
| 07. | **3** | 17. | **4** | 27. | **3** | 37. | **2** |
| 08. | **1** | 18. | **2** | 28. | **1** | 38. | **4** |
| 09. | **2** | 19. | **4** | 29. | **4** | 39. | **1** |
| 10. | **4** | 20. | **3** | 30. | **2** | 40. | **3** |

(1X40=40 புள்ளிகள்)

### சைவநெறி - II

*1.*

1. ஆன்ம தியானம், சிவத்தியானம்
2. உருத்திரன் + அங்கம் - உருத்திரனுடைய கண் எனப் பொருள் பெறும்
3. பிர் என்றால் நன்கு புலனாகும் படி என்றும் 'திஸ்ட' என்றால் நிற்றல் எனப் பொருள்படும்
4. முதல் - பித்தா பிறைசூடி

   இறுதி - தலைக்கு தலைமாலை
5. அட்டமா சித்திகளை கைவரப் பெற்றவரே யோகியர்
6. திருவதிகை
7. கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, உண்மை, தவம், அன்பு
8. எண்ணற்றவை, தாமாக எதனையும் அறியமாட்டாது, அறிவித்தால் மாத்திரம் அறியக்கூடியவை, சார்த்தல் வண்ணமானது, அழிவற்றது.

9. தீ மிதித்தல், கலையாடுதல், மடை பரவுதல், மடைப்பண்டம் எடுத்தல், கதவு திறத்தல், கட்டுச் சொல்லுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், குறி சொல்லுதல், குளுத்தி

10. பக்தி ஏற்படும், புலனடக்கம், மன மகிழ்ச்சி, உடல் உள ஆரோக்கியம், சாத்வீக உணர்வு மோலோங்கும், இறை சிந்தனை மேலோங்கும்.

(10X2=20 புள்ளிகள்)

**2.**

**அ.**

I.

**திருச்சிற்றம்பலம்**

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கணன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்திருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே

**திருச்சிற்றம்பலம்**

II.

திருவாரூரில் வீற்றிருப்பவரே! பிறர் எவரையும் நாடாது உமக்கே நிரந்தர அடிமை பூண்டு ஆட்பட்டிருக்கும் அடியவர்கள் மூண்டு எரியாத நெருப்புப் போல உள்ளே மனம் வருந்தி மிகவும் முகம்வாடி தங்கள் துன்பத்தை எடுத்துரைக்கும் போது எதுவும் செய்யாது இருப்பவரே! நீர் நன்கு வாழ்ந்து போவீராக!

**ஆ.**

I.

**திருச்சிற்றம்பலம்**

அங்கமும் வேதமும் ஓதுநாவற் அந்தனர் நாளும் அடிபரவ
மங்குல் மதி தவழ் மாட வீதி மருகல் நிலாவியமைந்த சொல்வாய்
செங்கயல் ஆர்புனல் செல்வம் மங்கு சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
கல்குல் விளங்கெரி ஏந்தி ஆடும் கணபதீச்சரம் காமுறவே

**திருச்சிற்றம்பலம்**

II.

வேதங்களையும் அவற்றில் அங்கங்களையும் ஓதுகின்ற நாவினை உடைய அந்தணர்கள் உமது திருவருடிகளை எப்போதும் துதிக்க வானத்தில் உள்ள சந்திரன் தவழுகின்ற மாட மாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமருகலில் உறையும் வல்லாளரே! கயல் மீன்கள் புரள்கின்ற நீர் வளமும் செல்வமும் நிறைந்த சிறப்பு வாய்ந்த திருச்செங்காட்டங்குடியில் இரவிலே ஒளி வீசுகின்ற அனல் ஏந்தி ஆடும் கணபதீச்சரத்தை விரும்பியதற்கான காரணத்தை கூறுவீராக.

இ.

I.

**திருச்சிற்றம்பலம்**

தந்தது உந்தன்னை கொண்டது என்தன்னை
சங்கார ஆர் கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே

**திருச்சிற்றம்பலம்**

II.

என் மனதை கோயிலாக் கொண்ட எம்பெருமானே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவனே! என் தந்தையே ஈசனே என் உடலையே இடமாகக் கொண்டவனே உன்னை எனக்கு தந்தாய் என்னை உன்னுடையவனாகக்கிக் கொண்டாய் யார் கெட்டிக்காரர் நான் எல்லையிலாத இன்பம் எய்தப் பெற்றேன். நீ என்னிடமிருந்து எதனை பெற்றுக் கொண்டாய் இதற்கு என்னிடம் எந்தப் பிரதி உபகாரமும் இல்லையே!

ஈ

I.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்கையிற் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவிர்க்கு ஒரு தீங்கில்லையே

II.

தாயாக விளங்குபவளும் அழகுக் கொடி போன்றவளும் அண்ட சராசரம் யாவற்றையும் தோற்றுவித்தவளும் மாதுளம் பூவை ஒத்த நிறத்தை உடையவளும் உலகம் முழுவதையும் காத்தருளுபவளும் அழகிய திருக்கரத்திலே பாசம் அங்குசம் கரும்புவில் என்பவற்றை கொண்டவளும் மூன்று திருவிழிகளை உடையவளுமான அம்பிகையை வழிபடுபவர்களுக்கு எந்தத் துன்பமும் இல்லை.

உ.

I.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மாநகருளானே

II.

திருவரங்கம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனே! பச்சை நிறத்தையுடைய பெரியதொரு மலை போன்ற திருமேனியையும் பவளத்தை ஒத்த திருவாயையும் தாமரைப் பூப் போன்ற சிவந்த திருவிழிகளையும் உடைய அச்சுதனே! தேவர்களுள் சிறந்தவனே! ஆயர்களது குலக் கொழுந்தே என்கின்ற இன்பத்தை தவிர தேவலோகத்துக்கு சென்று அதனது ஆளுகின்ற அந்த இன்பம் எனக்கு கிடைத்தாலும் அதனை நான் விரும்ப மாட்டேன்.

(3+2=5X2=10புள்ளிகள்)

*3.*

1. திருநந்தி தேவர், சனற்குமார முனிவர், சத்திய ஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர்

2. சித்தாந்த சாத்திர முதல் நூல்

   பன்னிரண்டு சூத்திரங்கள்

   மெய்கண்ட தேவரால் அருளப்பட்டது

   நான்கு இயல்

   எண்பத்தொரு வெண்பா

3.

   * புறச்சந்தான குரவர்களில் ஒருவர்
   * மறைஞான சம்பந்தரின் சீடர்
   * கி.பி.14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
   * கொற்றவன்குடி முதலியார் என அழைக்கப்பட்டவர்
   * சித்தாந்த அட்டகத்தை அருளியவர்
   * கோயிற் புராணம், திருத்தொண்டர் புராணசாரம் சேக்கிழார்
   * புராணம், திருமுறை கந்த புராணம், திருப்பதிகக் கோவை, பௌட் கராகம வடமொழி வியாக்கியானம் போன்ற நூல்களை அருளியவர்
   * ஏறாது நின்ற கொடியை ஏற வைத்தவர்
   * புராணத்தை அரங்கேற்றம் செய்தவர்
   * பெற்றோர் சாம்பலுக்கு முத்தி கொடுத்தவர்
   * முல்லைச் செடிக்கு முத்தி கொடுத்தவர்
   * தீண்ட வந்த பாம்பை தீண்டிக் கொன்றவர்
   * முனிவரின் சாபத்தை நீக்கியவர் போன்ற அற்புதங்களை மேற்கொண்டவர்
   * சித்திரை மாத அத்த நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்
   * அதி தீவிர பக்குவ நிலையை வெளிப்படுத்தியவர்

(2+3+5=10புள்ளிகள்)

**4.**

1. நூல் - பெரியபுராணம்

   பாடியவர் - சேக்கிழார்

2. மாலை உருத்திராக்கமே ஆடை கந்தை துணியே பொறுப்பு வாய்ந்த கடமை இறைவனது தொண்டு அல்லாது வேறு எதுவும் இல்லை கசிவான அன்பினை உடையவர்கள் எந்த குறையும் இல்லாதவர்கள் அத்தகையவர்களின் திடசித்தம் என்னால் எடுத்துரைக்கத்தக்கதோ.

3.

* உருத்திரன் + அங்கம் உருத்திரனுடைய கண்.
* ஆன்மாக்களிடம் இறைவன் கொண்ட கருணையை நினைவூட்டுவது
* சிவனடியார்கள் போற்றி அணிய வேண்டிய புனித சின்னம்
* சைவநெறியில் நின்று பிறழாது காக்கும் இரட்சை
* ஒன்று தொடக்கம் பதினாறு வரையிலான முகங்கள்
* பொன்னிறம், கருநிறம், கபிலநிறம் ஆகிய நிறங்களில் உள்ளது.
* ஒரே இன மணிகளாலான மாலையே அணியந்தக்கவை
* செபம் செய்ய உபயோகிக்கும் மாலை 108 அல்லது 54 மணிகள் கொண்டவை
* சம்பந்தர் உருத்திராக்க பெருமையினை பாடியுள்ளார்
* நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி.......
* உடல் நலம் செல்வளம் நீண்ட ஆயுள் கிட்டும். மறுமையில் ஆண்டவன் அடியிணில் மாறா இன்பம் வந்தெய்தும்
* சந்தியா வந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புரான படலம், சிவாலய தரிசனம் போன்ற கால், சிகை, சிரம், காது, மார்பு, தோள், கை ஆகியவற்றில் தரிசித்தல் நன்று

(2+3+5=10புள்ளிகள்)

**5.**

1. மேலான பண்பு

   சைவ சமயம் வலியுறுத்தும் மேலான பண்புகள்

2. * தம்மோடு தொடர்புபட்டவர்களிடம் காட்டுவது அன்பு, தம்மோடு தொடர்புபட்டவர்களிடம் மாத்திரமின்றி அல்லாதவரிடத்திலும் அக்கறை காட்ட வேண்டும், அது அருள் ஆகும்.
   * அருள் என்பது அன்பின் முதிர்ச்சி

3. * எதனையும் மறையாது வெளிப்படுத்தல் வாய்மை
   * வாயினால் வெளிப்படுவதால் வாய்மை
   * யாருக்கும் தீமை பயக்காதவற்றை பேசுவதே வாய்மை
   * “வாய்மை எனப்படுவது யாது எனில் ........” - திருவள்ளுவர்
   * பொய்மையால் நன்மையுண்டாகுமிடத்து பொய்மையும் வாய்மை ஆகும்.
   * பொய்மை வாய்மை இழந்த....... திருவள்ளுவர்

* உள்ளத்து பொய்யாறு ஒழுகின் ...... திருவள்ளுவர்

* மனத்தொடு வாய்மை..... திருவள்ளுவர்

* சத்தியமேவ ஜயதே - வேதம்

* சத்தியம் வத - உபநிடதம்

(2+3+5=10புள்ளிகள்)

6.

1. ஆணவ மலம்

2. இருளானது தன்னை காட்டும் தான் மறைத்து வைத்துள்ள பொருளைக் காட்டாது. ஆனால் ஆணவமே தன்னையும் காட்டாது தான் மறைத்து வைத்துள்ள பொருளையும் காட்டாது.

3.

* மும் மலங்களில் ஒன்று

* இறைவனை சாராதபடி பசுவை பீடித்து அதனை அறியாமையுள் அழுத்தி நிற்பது

* ஆன்மாவிடம் கோபம், குரோதம், ஆசை, மயக்கம் முதலான தீய குணங்களை உண்டாக்குவது. தீய குணங்களுக்கு மூல காரணம்.

* ஆன்மாவிடம் நான் என்ற அகந்தையையும் எனது என்கின்ற மமதையையும் உண்டாக்குவது

* ஆன்மாவோடு அநாதியாகவே உள்ளது

* ஆன்மா எப்போதிருந்து உள்ளதோ அப்போதிருந்தே அதனோடு ஆணவமும் உள்ளது அதனால் சகச மலம் எனப்பெயர் பெறும்

* இறைவன் திருவருளால் ஆணவ வலிமையை வெல்ல முடியும்

(2+3+5=10புள்ளிகள்)

7.

* முருக வழிபாட்டுத் தலம்

* ஆரிய சக்கரவர்த்திகளில் வழிபாட்டிற்குரிய தலம்

* 6ம் பராக்கிரமபாகுவின் மகனாகிய செண்பகப் பெருமாள் காலத்தில் கட்டப்பட்டது.

* சிங்கை பரராயசேகரன் காலத்தில் சிறப்பு பெற்றது.

* நல்லூர் கந்தன் ஆலயத்தை நடுநாயகமாகக் கொண்டு நான்கு எல்லையிலும் நான்கு கோயில்கள் கட்டப்பட்டன.

வடக்கு - சட்டநாதர்

கிழக்கு - வெயிலுகந்த விநாயகர்

தெற்கு - கைலாசநாதர்

மேற்கு - வீரமாகாளி அம்மன்

* 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது.

* ஒல்லாந்தர் ஆட்சியில் இரகுநாத மாப்பாண முதலியார் நிலத்தை வாங்கி ஆலயத்தை அமைத்தார்.

* வேல் மூலமூர்த்தியாக உள்ளது.

* கிழக்கு, தெற்கு, வடக்கு திசைகளில் கோபுர வாசல்

*ஆலயத்தினுள் தென்புறத்தில் தீர்த்தக்கேணி

*புலவர்கள் பலர் பிரபந்தங்கள் பாடியுள்ளனர்

*நித்திய நைமித்திய பூசைகள் கலந்தவாறு நடைபெறுகின்றன.

* ஆவணி அமாவாசையை தீர்த்த தினமாகக் கொண்டு 25 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது

**ஆ.**

* பண்டிகைகளில் ஒன்று

* ஐப்பசி மாதத்திலே கிருஸ்ண பட்ச சதுர்த்தசி தினத்திலே கொண்டாடப்படுவது.

* தீப + ஆவளி - தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தல்

* நரகாசுரன் - புராணக் கதையுடன் தொடர்புடையது

* தீய எண்ணங்களை போக்கி நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதே அர்த்தமுள்ள தீபாவளி

* அதிகாலையில் எழல், எண்ணெய் வைத்து நீராடி புதிய ஆடைகளை அணிந்து இறைவனை வணங்கி சுவையான உணவுகளை உற்றார் உறவினருடன் கூடி உண்டு மகிழ்தல்

* ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவதுதான் தீபாவளியின் தத்துவம்

* நல்லெண்ணமாகிய எண்ணெயை நம் உடம்பில் பூசுதல் வேண்டும். சித்தமாகிய அரப்பினால் அழுக்காறு, வெகுளி என்பவற்றை தேய்த்து போக்குதல் வேண்டும். ஞானமாகிய தூய உடைகளை உடுத்து புனிதமாக இருத்தல் வேண்டும்.

* விளக்கேற்றி புற இருளை நீக்கும் பொழுது எமது அக இருளும் நீங்க வேண்டும்.

**இ.**

* ஆகமம் சார்ந்த முறையிலும் ஆகமம் சாரா முறையிலும் வழிபாடு

* மர நிழலில் திரி சூல வடிவில் எளிய வழிபாடு

* பரிவார தெய்வமாகவும் கர்ப்பக் கிரகத்தில் மூல மூர்த்தியாகவும்

* கிராமத்தெய்வம், காவற் தெய்வம், இரத்த பலியேற்கும் தெய்வம்

* சிவகுமாரர், சிவமூர்த்தம்

* பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோ போற்றி..... திருநாவுக்கரசர்

* சிவாகமங்களில் கிராம சாந்தி

* உடுக்கு, சூலம், கபாலம் என்பவற்றை ஏந்தியுள்ளார்

* ஆடையற்ற கோலத்தில் திகாம்பரர்

* சேத்திரபாலகர் சேத்திரம் - இடம் - தலம், பாலகர் - பரிபாலிப்பவர்.

* குலதெய்வம்

* வளவுகள் நீர் நிலைகள் விளக்கேற்றி வழிபடல்

* பொங்கல், வடை மாலை சூட்டல்

* சித்திரைப்பரணி, ஐப்பசிப் பரணி, தை மாதத்து முதலாம் செவ்வாய்

**ஈ.**

* ஆண்டு, மாதம், கிழமை, நாள் - காலக்கணிப்பு அலகுகள்
* சந்திரமானம் - சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடும் முறை
* சூரியமானம்/ சௌரமானம் - சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடும் முறை.
* சந்திரமானம் இருவகை

  பூர்ணிமாந்த முறை

  அமாந்த முறை
* மதியின் அடிப்படையில் கணிப்பதால் மாதம்.
* ஒருநாள் சூரிய உதயம் முதல் அடுத்தநாள் சூரிய உதயம் வரையிலான காலப்பகுதி
* வழிபாடுகள், விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் நிர்ணயம்
* சூரியன் மேடராசியில் பிரவேசித்தல் - தமிழ் சித்திரை புத்தாண்டு

(5+5=10புள்ளிகள்)